www.tamilarangam.net

# சர்வதேச தமிழர்

**Sarvadesa Tamiler**
(INTERNATIONAL TAMILS)

மே தினவிழாவில் முன்னாள் பிரதமர் குறுகாலத்துடன் தமிழர்கள்!





பழ.நெடுமாறன்- சிங்காரவேலன்



நடனம்
கிருத்திகா-சந்தியா



மிருதங்கம்
சுரேஷ்




மேதினஊர்வலத்தில் குடியேறியோர்!



விஜய்-சஞ்சயன்



சிவகுமாரி



ராஜன்





ட்ரம்மன் தமிழர்நட்புறவுக்கழக புத்தாண்டுவிழா! பார்வையாளர்கள்



விவாதஅரங்கு:
புஷ்பா-சந்திரன்-இந்திரன்-கணேஷ்

பாட்டு: மாலதி-மைதிலி-ஜெயமலர்-விஜயா





வினோத்

ரவி



ரட்ணசிங்கம்

தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி, ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity.

SARVADESA TAMILER - Estd.1994 ISSN:0805-7443 1997 vol.4,Nr.3

ஔவைசண்முகி நடனம்



இந்துஜா – தாரணி – ஜனிசா – ஜீன்



பாட்டு பிரகாஷ் – சிந்துஜா – திவாகர்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்/நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,ஜ.றோயலா துறொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன்ஏகசுண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ:

## வாசகர் களம்:

**ஆசிரியர் அவர்களுக்கு!**

தமிழ்ப்புத்தாண்டு வணக்கங்கள்!மரபுக்கவிதை என்பது–எதுகை,மோனை வைத்து–மனதில் பதியவேண்டும் என்பதற்காக, யாப்பு இலக்கணத்தை தழுவி எழுதுவதாகும்.தமிழக உணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலன் தமிழீழப்பிரச்சனை தொடர்பாக எழுச்சிபொங்கும் மரபுக்கவிதைகள் எழுதியுள்ளார்.அவரதுகவிதைகளை அனுப்புகிறேன்.தங்கள்இதழில் வெளியிட்டு தமிழீழ விடுதலைக்கு ஆதரவுதிரட்ட கிடைத்துள்ள ஒரு ஒப்பற்றகவிஞரை பயன்படுத்திக்கொள்வதே நலம்!என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பேராசிரியர் தீரன்-மாநிலதலைவர்,பாட்டாளிமக்கள்கட்சி,தமிழ்நாடு**

**தமிழினியீர்!**

சர்வதேசதமிழர் உலகத்தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஒப்பற்ற தமிழ்இதழ்!தமிழ்மலர்களை ஒருங்கிணைக்கும் இணைப்புச்சரம்!தமிழுணர்வூட்டவே உருவெடுத்த பத்திரிகைத்தூது! வளர்ச்சிக்கும்,வெற்றிக்கும் எம் வாழ்த்துக்கள்!

**தமிழக உணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலன்,தேவதானம்,திருச்சி-2**

**அன்புள்ள ஆசிரியருக்கு!**

காதலி கடிதத்துக்குகாத்திருப்பதுபோல் சர்வதேசதமிழர் வரவுக்காய் வழிமேல்விழிவைத்து காத்திருப்பதில் ஒரு ஏக்கம்! உலகஅளவிலான தமிழர்கருத்துபரிமாற்றம்,ஈழதமிழர்அவலங்களை உலகத்தமிழருக்கு அறிமுகம்செய்வதில் முக்கியபங்கு பாராட்டுக்குரியது!.

**ச.மகி,கோப்பாய்,இலங்கை**

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு!**

7.3.97அன்று ஈழமக்கள்ஆதரவுகூட்டமைப்பின் சார்பில் கடலில் மூழ்கிமாண்ட 130 தமிழ்அகதிகளுக்கு இரங்கல்கூட்டம் நடத்தினோம்.சட்ட உறுப்பினர் ராம்சிங்,தஞ்சை பெமணியரசன்(சிறப்புரை),அறிஞர்கள்,கட்சிபிரமுகர்கள் அஞ்சலியுரையாற்றினர் வைகாசி மாதம் புதுச்சேரியில் ஈழமக்கள் ஆதரவுகூட்டமைப்பு, ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நடாத்த உள்ளது. புதுச்சேரி தமிழார்வலர்கள் சர்வதேசதமிழரை ஆவலுடன் படித்துபயன்பெறுகின்றனர்.

**புதுச்சேரி.ச.வேல்முருகன்**

**அன்பின் ஆசிரியருக்கு!**

கடந்த ஏழுவருடங்களாக தமிழகத்துமேலூர் சிறப்புமுகாமில் தேவையற்ற முறையில் சிறைவைக்கப்பட்டிருந்த என்னை 17.02.97 நடந்தவழக்கில் விடுதலை செய்வதாக நீதிபதி தீர்ப்பளித்தும்,தொடர்ந்தும் சிறப்புமுகாமிலேயே நான் அடைத்து வைக்கப்பட்டுள்ளேன்.எப்போது விடுதலை கிடைக்கும் என தெரியவில்லை.சிறப்புமுகாமிலிருந்து விடுதலைசெய்யுமாறு கோரி உயர்நீதிமன்றில் மீளவும் வழக்குதொடர என் வழக்கறிஞர் சென்னை சென்றுள்ளார்.வழக்கில் எனக்கு நீதிகிடைக்க தாங்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கும்,ஆதரவுக்கும் நன்றிகள்!நான் சிறப்புமுகாமிலிருந்தும் விடுதலைபெற தாங்கள் உதவிடவேண்டும் என மிகதாழ்மையுடன் வேண்டுகிறேன்.எமக்கு தொடர்ந்துகிடைக்கும் சர்வதேசதமிழரை இங்குள்ள அகதிகள் அனைவரும் விரும்பிப் படித்துவருகிறோம்,நன்றி!

'மத்தியஅரசின்தவறா?மாநிலஅரசின்தவறா? என்பதை நாமறியோம்! சிறப்புமுகாமில்வாடும் நாம்அறிந்தது எல்லாம்
முகாம் சுவர் வலிது! சிறப்புமுகாமின் சித்திரவதையால் ஒவ்வொருநாளும் ஆண்டாய்கழியும்!
சிறப்புமுகாம்ஒரு மூடாதகல்லறை! அப்படியானால் அகதிகள்..?அவர்கள் உயிரோடுஇருக்கும் பிணங்கள்!'

**சி.பாலச்சந்திரன்............மேலூர்சிறை,மதுரை**

(மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்துக்கு! சிறை,சிறப்புமுகாம்களில் நீதியற்ற முறையில் வாடும் பாலன் போன்ற ஈழ அகதிகளின் நிலையை மனிதாபிமானரீதியில் பரிசீலிக்கும்படி அன்புரிமையுடன் வேண்டுகிறோம்! ஆ–ர்).

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு!**

சர்வதேசதமிழருக்கு என்படைப்புகளை அனுப்பி ஊக்கம்தரவிரும்புகிறேன்.சர்வதேசதமிழர் தொடர்ந்தும் சிறப்பாகவெளிவர வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**பா.தங்கம்.................ஒஸ்லோ**

**பெருமதிப்புக்குரிய ஆசிரியருக்கு!**

நார்வே நாட்டிலும் தமிழ்ப்பற்று மிக்க, தமிழை பரப்பும் நோக்குடன் சர்வதேசதமிழரை உருவாக்கி பாடுபட்டுவருவதை நினைக்கையில் எம்நெஞ்சு குளிர்கிறது.வாழ்த்துக்கள் பல! தங்கள் பணிக்கு எம்மால் இயன்ற உதவிகளை தந்திட என்றும் நாம் தயார்!

**ஓ.இராம.புருசோத்தமன்..சென்னை-3**

**அன்புள்ளம் கொண்ட ஆசிரியருக்கு!**

நோர்வே(ஸ்ராவங்கர்)சிறப்பிதழ் நோர்வேபற்றிய நமதுமதிப்பீட்டை உயர்த்தியுள்ளது.மதம்,மொழி,மனங்களைகடந்து தங்கள் பணிதொடரவேண்டும் என விரும்புகின்றோம்! கவிதைகளை அதிகரியுங்கள்.ஆனால் அதிக கவிதைகள் ஒப்பாரிகளாக அல்லது புலம்பல்களாகவே இருக்கின்றனவே!கொஞ்சம் கவனிக்கக்கூடாதா?சிறப்பிதழ்களை அதிகபக்கங்களில் தருக!

**கணபதி கணேசன்........மலேசியா**

**அன்பின் ஆசிரியருக்கு!**

நலம்! வாழ்த்துக்கள்!! சர்வதேசதமிழர் பற்றி அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.பொறியியலாளனான நான், உலகளாவிய இந்திய இளைஞர் அமைப்பு அங்கத்தவனாகவும் உள்ளேன்.சர்வதேசதமிழரின் சந்தாதாரராகவும் விரும்புகின்றேன்.நன்றி!

**எஸ்.ஞானசேகரன்.....சிங்கம்புணாரி,தமிழ்நாடு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வதேசதமிழர்.1997 தொ.4, இல.3

**ஆசிரியர் கருத்து:**

## தமிழர்களும் வன்முறையும்!

வன்முறை தமிழர் கலாசாரத்தின் ஒரு அம்சமா?என சிலர் வருத்தம் கலந்த தொனியில் கேட்கிறார்கள். இல்லை! அவை அறியாமையின், பொறுமையின்மையின்,விரக்தியின் வெளிப்பாடே!என,பலர்கூறுகிறார்கள். அழியப்போகிறோமே! என்றநிலையில் தப்பிவாழ்தலுக்காக,தன்மானத்துடன் வன்முறையுட்பட,பலவழிவகைக ளையும் மனிதர்கையாண்டு போராடு வதை உலகம் இன்று காண்கிறது. அதை வருத்தத்துடன் ஏற்கிறது. முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும்!பல்லுக்குபல்லு!இரத்தத்து க்கு இரத்தம்!என்ற கொள்கைகள் பல்லற்றவர்களையும்,இரத்த ஆறுக ளையுமே உலகைக்காணவைக்கும். வசதியற்றநாடுகளில் வாழ்வுக்குப்போ ராட்டம்!அதுநியாயப்படுத்தக்கூடியது வசதியுள்ளநாடுகளில் வாழ்பவர்கள் பலரின் போராட்டம் சமத்துவம், அமைதியானவாழ்வு எனினும் சிலரது போராட்டம்,பணஆசை, பதவிஆசை,பேராசை,பகட்டாசை என பலவிதமாக பரந்துபட்டுள்ளது. இதனால் பொறாமை,வெறுப்பு,ஆத்திரம் கண்ணைமறைக்க வன்முறை களே மனிதர்முன்உடன்தோன்றுவதாக உள்ளது.ஒருசில தனிமனிதர்கள், குழுக்களின் வன்முறைகள்,மிரட்டல் கள் சனநாயகம்,அமைதி,நல்லெண் ணம் விரும்பும் பலருக்கு பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளன. தீர விசாரித்து அறியாத சில சில்லறை விடயங்களும்,பேசித்தீர்க்கக்கூடிய அற்பவிடயங்களும் கூட வன்முறை களுக்கு,வித்திடுவதைகாண்கிறோம். பத்துரூபாபணத்துக்காக தாம்பெற்ற சிறுமியை,பெற்றேரேஎரித்தகொடுமை, ராகிங்கொடுமையால்,ஒருபேராசிரியரின் மகன்,இறந்தசம்பவம்,வந்தாரைவாழ வைக்கும்தமிழகத்தில்,நடந்துள்ளது. மேற்குநாடுகளிலும் தமிழர்வன்முறை கள் ஆங்காங்கு,ஒருசிலரால்,அவ்வப் போது நடந்துகொண்டுதானுள்ளன. தமிழர்கள் இவற்றை எதிர்காலத்தில் தவிர்ப்பது நல்லபலன்களையேதரும்.

## நேற்று!இன்று, நாளை

### -அமைதியான உலகம்!

உலகப்படத்தில்,வடக்கே அதிகநாடு கள் செல்வந்தநாடுகளாயும்,தெற்கே அனேகநாடுகள் வறியநாடுகளாயும் இருப்பதை அவதானிக்கலாம்.தென்., தென்.கிழக்குஆசியா(இந்தியா,பாகிஸ் தான்,பங்களாதேஷ்,பர்மா,கம்போடியா, நேபாள்,பூட்டான்,லாவோஸ்),ஆபிரிக்க ாவின் அனேகநாடுகள்,தென்.அமெரிக் காவின் கைத்தி போன்ற நாடுகள், மத்தியகிழக்கின் யெமன்,மத்தியஆசி யாவின் ஆப்கானிஸ்தான்,ஓசியானியா வின் பப்புவாநியுகினி,சொலமன்தீவு போன்றவை குறைந்தநல்வாழ்வுநாடு களாயும்,குறைந்தவிருத்திநாடுகளாயு ம் உள்ளன.நடுத்தரநல்வாழ்வுநாடுக ளாக சில கிழக்குஐரோப்பியநாடுகளு ம்,பல தென்அமெரிக்கநாடுகள்(பிரேசி ல்,எக்வடோர்,பரகுவே,சூரினாம்,பேரு, கியுபா,குவாட்டமாலா,எல்சல்வடோர்) சிலஆசியநாடுகள்(இலங்கை,மலேசிய ா,சீனா,பிலிபீன்ஸ்,இந்தோனேசியா),பல மத்தியகிழக்குநாடுகள்(சவுதி,துருக்கி சிரியா,ஓமான்,ஜோடான்,லிபியா,எகிப்த்) சிலஆபிரிக்கநாடுகள்(மொரிசியஸ்,சிச ல்ஸ்,பொற்ஸ்வானா,தெ.ஆபிரிக்கா) சில ஓசியானியாநாடுகள்(பிஜி,மேற்குச மோவா)உள்ளன.உயர்நல்வாழ்வுநாடு களாக,பலஐரோப்பியநாடுகளும்(நோர்வே,சுவிஸ்,பிரான்ஸ்,ஜேர்மனி,பிரிட்டன்) 2வடஅமெரிக்கநாடுகளும்(கனடா, யு.எஸ் .ஏ)சிலதென்அமெரிக்கநாடுக ளும்(பகாமாஸ்,ஆஜன்டினா,ரினிடாட்) சிலஆசியநாடுகளும்(யப்பான்,சிங்கப்பூ ர்,புருணை,தெ.கொரியா,ஹாங்காங்) சில மத்தியகிழக்குநாடுகளும்(இஸ்ரே ல்,சைப்ரஸ்,குவைத்)ஓசியானியாவில் அவுஸ்ரேலியா,நியுசிலாந்துமுள்ளன. உலகவங்கியின்,மொத்தஉள்உற்பத்தி (மொ.உள்.வருமானம்),மனிதமேம்பா ட்டு சுட்டெண்(H.D.I.-Human Devt.Index) என்பவற்றை அடிப்படையாககொண் டே ஐ.நா.அபிவிருத்திதிட்டவமைப்பு 173 நாடுகளை இப்படியாகப் பிரித்து ள்ளனர்.

அன்றைய காலனித்துவநாடுகள், அல்லதுஅந்நாடுகளுடன் ஒத்துழை த்தநாடுகள்(உ-ம்:நோர்வே-கப்பல் போக்குவரத்து) இன்று பணக்கார நாடுகளாயும்,காலனியாகஆளப்பட்டவ ர்கள்,பொருளாதாரரீதியாகசுரண்டப்பட் டநாடுகளே,அனேகமாக வறியநாடுக ளாயும் உள்ளனர்.வடஅமெரிக்கர் தம்நாடுகளை-அடிமைகளாக ஆபிரி க்கர்களை சங்கிலிகளில் பிணைத்து கப்பலில் பலாத்காரமாக ஏற்றிவந்து பண்ணைகளில்,சுரங்கங்களில் மிகக் குறைந்தசம்பளத்தில் வேலைசெய்வி த்து-இப்படியாக கட்டிஎழுப்பினர். அமெரிக்காவிலிருந்து தப்பிவந்த பலகறுப்புஅடிமைகள் கனடாவில் தஞ்சம்புகுந்தனர்.பணக்காரநாடுகள் பெரும்பாலும் வெள்ளையர்நாடுகளா கவே உள்ளன.அத்துடன் குளிர்நாடு களாயும் இருக்கின்றன.எண்ணைவ ளநாடுகள் இங்குவிதிவிலக்கு.

ஆபிரிக்காவில் தோன்றியமனிதஇனம் ஆசியா,ஐரோப்பா,அமெரிக்கா,ஓசியானி யா எனபரந்தது,என்பதுவிஞ்ஞானம்! குளிர்தேசத்தில் குடிபுகுந்தவர்களிட ம்,நாளை பற்றியகவலை அதிகம் இருந்ததால் முன்னெச்சரிக்கை,அவ தானம்,புத்திசாலித்தனம் கூர்மையாக இருந்திருக்கலாம்.சேகரிப்பு,சேமிப்பு, ஆராய்வுக்குணம்,பாதுகாப்புகுணம் அதிகம் இருந்திருக்கலாம்.

தென்பிராந்தியமக்களிடம் காலநிலை, உணவு,உடைபற்றியபயம் ஒப்பீட்டு ரீதியில்குறைவாகவே இருந்துளது. எப்படியும் சீவிச்சிடலாம்,என்ற,கொள் கை,அவர்களை அதிகம் நாளைபற் றியகவலையை தோற்றுவிக்காதிருந் திருக்கலாம்.எது எப்படிஇருப்பினும், தென்புலமக்கள்வறுமையும்,வடபுலம க்கள்செழுமையும்,எப்போதும் பெரு ம்சர்ச்சைக்குள்ளாகத்தான் செய்யும். அன்று நேரடியான காலனித்துவசுர ண்டல்,இன்று வர்த்தகரீதியான, அர சியல்ரீதியான,பொருளாதாரரீதியான, மறைமுகலாபமீட்டல்(நாணயமதிப்பி றக்கம்,மூலப்பொருட்களின் மலிவான கொள்முதல்,உற்பத்திகளின்மலிவான விற்பனைவிலை,பலவிதவரிகள்,தண் டவரிகள்,வறியநாட்டுதலைவர்கட்கு லஞ்சம்வழங்கிஆயதம்விற்றல்,அவர் கள் அரசியல்பிரச்சனைகளை தீர்ப்ப தில் அக்கறையின்மை)பலவிதமான வழிகளில் நடைபெறுகிறது.(வரும்)

(Før/Nå/Framtid-om harmonisk verden....N.S.Pirabu)

குகனேறியப்பன்;போலவோக:இரா.விஜய;போட்ஸ்பியுட:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார் கிறஓகர்:ஐ.ரி.ரவீந்திரன் கல்வோக்:கனக சிங்கம்.தா. பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்181.4713060;மு.ஆறுமுகம் செ.நாகேந்திரன் 181.5532190கனடா:மா.மகிந்தன்;இ.வளர்மதி; நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,க.பாஸ்கரன்.பின்லாந்த்: இ.சிவலிங்கம் இந்தியா: சென்னை:போராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161:போராசிரியர்.ஐ.ராமச்சந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரைக்கலைஞர்.பிரசாந்த்;சேலம்:இராசமாணிக்கம்திருச்சி:ஜான்ராஜ்தேவர்; டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:க.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவி ராமானுசம்,கதிர்.சம்பத்குமார் கேரளா: ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்:இரா.ப.முரளி,பாவலர்.ந.தமிழ்மறவன்

## சுதந்திரம் முகிழ்த்த வேளையில்.......!

## பேராசிரியர் வ.மாசிலாமணி அண்ணா பல்கலைக்கழகம்

~ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே,ஆனந்தசுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று, ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே~ என்று பாரதி முழங்கியபோதும் அவர் அந்தவேள்வியில் வெந்து மாய்ந்தபோதும்,சுயராஜ்யத்திற்கு பின்னர்தான்,இந்தியர்களுக்கு மகத்தானசோதனை காத்துக்கிடக்கிறது, என்பதை அவர் உணரவில்லை.அனைத்துலகஅரங்குகளில் ஒருஆண்மைப் பொலிவும்,பண்பாட்டுச் செறிவும் உள்ளநாடாக இந்தியாவை நிலைநிறுத்தும் முயற்சி,ஆங்கிலே யரை அனுப்பிவைப்பதைவிட பலமடங்கு பெரியசாதனையாக இருந்தது.

இதற்கு சில முக்கியகாரணங்கள் உண்டு.இந்தியா இங்கிலாந்துபோல் ஒருமொழி,ஒருஇனம்,ஒரு மதம், ஒரு பண்பாட்டுமரபுள்ள நாடல்ல.இங்கு ஐந்துக்கும் மேற்பட்டஇனம்,பத்துக்கும் மேற்பட்ட மதம், நூற்றுக்கும் மேற்பட்டமொழிகள் உள்ளன.

ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளாக இந்தியசமுதாயத்தின் குருதியிலும்,குருத்திலும் ஊடுருவி,உறைந்து போனவை,சாதிப்பிரச்சனையும் மதப்பிரச்சனையும்! இதனால் இந்தியாவில் எப்போதுவேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் எரிமலை வெடிக்கும். ஏராளமானவர்கள் அப்பாவிகள்.அநியாயமாய் இரத்தம் சிந்துவார்கள். பெரும்பாலான நிலங்கள், பெரிய தொழிற்சாலைகள், ஒரு சில பணமுதலைகளின் முதுகிலேயே இருந்தன. எத்தனையோ ஆறுகள், கனிவளங்கள் ஏராளமாய் இருந்தும் மக்கள் தொகையினால், கடலில் கரைந்த பெருங்காயமாகவே போய்க்கொண்டிருந்தன.சுருக்கத்தில் இந்தியா பணக்காரர்கள் நிறைந்த ஏழ்மை நாடு.

அரசியல் கோணத்தில் பார்த்தால் இந்தியா ஒரு வாக்காளர் சமுத்திரம். மிகப்பெரிய குடியரசு. ஆனால் ஒரு அலுவலகத்திற்கு வேலையாள் பணிக்குக்கூட ஒரு சில தகுதிகள் வேண்டும். ஆனால் வேட்பாளர் ஆகவோ அமைச்சராகவோ ஆட்சியாளராகவோ எந்தத் தகுதியும் வலியுறுத்தப்படவில்லை. எனவே பணபலமும் அடியாட்கள் பலமும் பாரம்பரிய பெருமி தமும் உள்ளவர்கள் கையில் அரசாங்கம் அகப்பட்டு குரங்கு கைப்பட்ட மாலையாகிக் கொண்டிருந்தது.

இதனால் பணபலமும் உடல்பலமும் அறிவுபலமும் குறைந்த ஏழைகளும் பெண்களும் அடிபட்டு மிதிபட்டு அவலப்பட்டார்கள். பெரும்பான்மையினருக்குக் கைவிரல்கூட எண்ணத் தெரியாது என்பதும், கட்டைவிரல்தான் கையெழுத்துப் போடும், என்பதும் தேசிய அவமானச் சின்னங்கள்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டுச் செல்கையில் இடிபாடுகளும் பாம்பும் தேளும் நிறைந்த மாளிகையாக விட்டுச் சென்றனர். இதற்கு இவர்கள் ஒரு முக்கிய காரணம்! என்பதும் இவர்கட்கு முந்தியவர்களும் இன்னொரு முக்கிய காரணம் என்பதும் முழுப்பூசனி உண்மை. இந்தியா முழுமைக்கும் இவ் வர்ணனை பொருந்தும். எனினும் தமிழகத்தில் சிறப்பான சில சூழல்கள் இருந்தன. திராவிட இயக்கத்தின் எழுச்சியும் பொதுவுடமைக் கட்சியின் வீச்சும் இவற்றில் குறிப்பிடத் தக்கவை.

காங்கிரஸ்கட்சியின் கடைநிலை ஊழியராக இருந்து கதர்விற்று வந்த ஈ.வெ. ராமசாமி என்ற தனி மனிதன், காங்கிரஸ் கட்சியில் மேல்சாதி~ கீழ்சாதிப் பிரச்சனை அளவுக்கு மீறி ஊறல் எடுத்துப் போய்விட்டதை உணர்ந்து, காங்கிரஸ் வெள்ளைப் பிரபுக்களை வெளியேற்றிவிட்டு, மேல்சாதிப்பிரபுக்களிடம் பெருவாரியான மக்களை அடகுவைத்துவிடும் என்பதை உணர்ந்து திராவிட இயக்கம் தவக்கினார். சமுதாய மறுமலர்ச்சியும் மனிதநேயமும் தான் இவர் இலட்சியம். இந்த இலட்சியத்துக்கு இடையூறாக வந்த எதுவானாலும்~கடவுள், மதம்,மொழிப்பற்று, தேசப்பற்று, காங்கிரஸ்கட்சி~எதுவானாலும் அதனை உடைத்து தூக்கிஎறிய அவர் தயங்கவில்லை.

இதன் காரணமாகத்தான் கடவுளைப்படைத்தவன் மனிதன் என்பதையும் கடவுளைக் கும்பிடுபவன் காட்டுமிராண்டி! என்றும் சொன்னார்.தமிழில் திருக்குறளைத் தவிர மற்ற எல்லா நூல் களையும்,கடலில் தூக்கிப்போட்டு தலைமுழுகச்சொன்ன தைரியம் வந்தது.

மற்ற பெரிய சீர்திருத்தவாதிகள் போதனைசெய்தனர்.பேசினர். ஈ.வெ.ராவும் அவர் தோழர்களும் களத்தில் இறங்கி,சேற்றில் கால்வைத்து மூடப்பழக்கங்களை பிடுங்கி எறிந்தனர். பல சமயங்களில் இவர் கட்சி முரட்டுத்தனத்தில்,ஏன் மூர்க்கத்தனத்தில்கூட இறங்கியிருக்கிறது,எனினும் ஆயிரம் ஆண்டுகளாகப்பிடித்திருந்த பேயை ஓட்ட இந்த முரட்டுபூசாரி தேவையாகத்தான் இருந்தது.

உலகசரித்திரத்தில் இயேசுவுக்கு முன்,இயேசுவுக்கு பின் என்று காலகட்டத்தை பகுப்பதுபோல், தமிழகசரித்திரத்தில் திருவள்ளுவருக்கு முன்,திருவள்ளுவருக்குப்பின் என்று பிரிக்கலாம்.அல்லது பெரியாருக்கு முன்,பெரியாருக்கு பின் என்று பிரிக்கலாம்.அதாவது தமிழகவரலாற்றில் திருவள்ளுவருக்கு பின் வந்த பெரியமலை பெரியார் தான்.

அரசியலிலும்,சமுதாயத்திலும் பெரியார் செய்த புரட்சிக்கு பத்துசதவீதம் பொதுவுடமைக்காரர் கள் (கம்யுனிஸ்ட்டுகள்)செய்தார்கள்.திரு.வி.க.வும்,சிங்காரவேலரும்,ஜீவாவும் ராமகிருஷ்ணனும், ராமமூர்த்தியும் பொருளாதாரக்கோணத்தில் மனிதநேயத்திற்கு மண்ணை பண்படுத்தினர். சுதந்திரம் வாங்கியவுடன் அறிவியல் மனிதாபியான நேரு இந்தியாவை ஒரு சமாதான,சமத்துவ பொருளாதாரத்துக்கு வழியமைத்ததால் இவ்விரு இயக்கங்களுக்கும் நல்ல ஊக்கம்கிடைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஆதிக்கச்சக்திகளை முறியடித்தே தீரவேண்டும்!—இரா. அழகிரி பேட்டி

**ஈழமக்களுக்கு நேர்ந்துவருகின்ற கொடுமைகளை உரிமையுடன் உலகெங்கும் கண்டிக்கும பல இயக்கங்களில் புதுச்சேரி ஈழமக்கள் கூட்டமைப்பும் ஒன்று .இதன் அமைப்பாளரும் காந்திகாமராஜ் தேசியகாங்கிரஸ் பொதுசெயலருமான இரா.அழகிரி அவர்களைச்சந்தித்தோம்.இவரது குடும்பம் தாயார்,மனைவி,இருகுழந்தைகளைக்கொண்டது.உணவுகளஞ்சியம் எனும் உணவகஉரிமையாளர் இவர்.எளிமையான தோற்றம்,கருத்ததேகம்,தெளிந்த பேச்சாற்றல் கொண்டவர்.**

கேள்வி: ஈழமக்கள் ஆதரவுகூட்டமைப்பு எப்போது தொடங்கப்பட்டது?

பதில்.1995ல் கார்த்திகை 1,2 ஆகிய திகதிகளில் தமிழ்சான்றோர்பேரவை சென்னையில் மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டில் கலந்துகொள்ளசென்றிருந்தபோது பழ.நெடுமாறன் அவர்களைச்சந்தித்தேன்.ஈழமக்களுக்கு ஆதரவாக குரல்எழுப்பும் ஒருஅமைப்பினை உருவாக்க ஆலோசனை கூறினார்.ஈழமக்கள் மீதான தாக்குதல்களை கண்டனம் செய்யவே எமது அமைப்பு கார்த்திகை 5ல் தொடங்கப்பட்டது.அதன்பின் ஈழமக்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து பேரணிகளையும்,பொதுக்கூட்டங்களையும் நடத்திவருகின்றோம்.ஈழமக்களுக்கு நீதியும் அமைதியும் கிட்டும்வரை எம் குரல் ஒலித்துக்கொண்டிருக்கும்.

கேள்வி:புதுச்சேரியில் வாழ்கின்ற ஈழஅகதிகளைச்சந்தித்துஇருக்கிறீர்களா?உ தவிகள்ஏதாவது செய்யப்பட்டதா?

பதில்:இதுவரை யாரும் என்னைச்சந்திக்கவில்லைஉ தவிசெய்ய வாய்ப்புகள்வரின் உறுதியாக உதவுவோம்.

கேள்வி:இந்த அமைப்பை தொடங்கியபோது அரசியலாளர்களின் ஆதரவு எப்படி?

பதில்: அமைப்பை ஏற்படுத்தியதும் முதலில் 10–12 கூட்டங்களுக்கு தி.மு.க.,அ.தி.மு.க, ,காங்கிரஸ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம். அவர்கள் வரவில்லை.வலது,இடது கம்யூனிஸ்ட்டுகளும் வரவில்லை. அவர்களுக்கு பணம்,அதிகாரம் தான் வேண்டும்.ஆட்சியில் அமர்ந்து மக்களைஆளவேண்டும்.இதுவே அவர்களது குறிக்கோள்.ஒருநாள் ஈழம் விடுதலை பெறும்.அன்று நமதுபெயர் வெளிவரப்போவதில்லைஉலகெல்லாம் குரல் எழுப்பும்போது அவர்கள் இணைந்துகொள்வர்.ஈழம் விடுதலை பெறும்போது எதிரிகள் தான் முக்கியவிருந்தினர் ஆவர்.நாம் மறக்கப்பட்டுவிடுவோம்.எனினும் நம்பணி எதைப்பற்றியும் கருதாது செய்துவருவோம்.

கேள்வி:தங்கள் பணியில் காவல்துறையின் குறுக்கீடு உண்டா?

பதில்:சில சமயங்களில் உண்டு.நிகழ்வுஅனுமதி மறுக்கப்படும் சம்பவங்கள் உண்டு.இடங்களும் மறுக்கப்படுகின்றன.இப்படி பேசக்கூடாது! இதையெல்லாம் சொல்லக்கூடாது! என நமக்கு வழிகாட்டுகின்றனர்.

கேள்வி:ஈழம் பற்றி பேசுபவர்கள் என்றாலே புலிகளிடம் பணம்பெற்றுக்கொண்டுதான் ஆதரவாகப்பேசுகின்றனர், என்றொரு குற்றச்சாட்டு உண்டு.அது பற்றி தங்கள் கருத்து?

பதில்:இது ஆதிக்கச்சக்திகளான பார்ப்பனர்களின் பொய்ப்பிரசாரம்! அவர்கள் ஈழவிடுதலைக்கு எதிரானவர்கள்.தற்போது பார்ப்பனர்களிடம் மட்டுமே பத்திரிகை,ஆட்சி,பணபலம் உண்டு.ஒரு தமிழ்நாட்டு பார்ப்பனர் டில்லிசென்றால் அனைத்துவேலைகளும் எளிதில் நடக்கும்.நாம் சென்றால் எதுவும் நடக்காது.

உதாரணத்துக்கு சென்றஆண்டு பார்ப்பனரான ஒருகுடும்பநண்பருடன் கல்கத்தா சென்றேன்.தமிழ்ச்சங்கம் செல்ல ஆசைகொண்டு அவருடன் அங்குசென்றேன்.சனவரி 25 தமிழ்சங்கநிறுவனநாள்.பலர் கூடியிருந்தனர்.நான் சங்கத்திற்கு நன்கொடையளித்தபோதும் நண்பர் எதுவும் உதவிட விரும்பவில்லை.

அதேசமயம் பிரபலவானொலி இயக்குனரான பார்ப்பனர் ஒருவர் அங்குவந்தபோது,நண்பர் அவரது குடும்பத்தினரை அன்புடன் விசாரித்து உறவுகொண்டாடினார்.இதனால் மகிழ்ந்த இயக்குனர் அவருக்கு ஒருதொகையளித்து வானொலிநிகழ்ச்சிக்கு ஒப்பந்தம் செய்தார்.இவ்வாறு அவர்கள் தமக்குள் மட்டுமே ஒருவருக்கொருவர் உதவி வருகின்றனர்.அவர்கட்கு பணம் ஈட்டுவதே குறிக்கோள்.அவர்கள் தமிழ்வளர்ச்சி,தமிழீழவிடுதலைக்கு எதிரானவர்கள்.இதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.ஒரு நல்லதோ,கெட்டதோ முதலில் ஐயரை வரவழைத்து விடுகிறோம்.ஆபத்துக்கும்,அவசரத்துக்கும் உதவும் நம்மவர்களை மறந்துவிடுகிறோம்.பெரியோர்கள்,நண்பர்கள், நல்லவர்கள் செய்துவைக்கும் திருமணங்கள் எதிர்காலத்தில் அதிகம் வரவேண்டும்.நம் சிந்தனைகளையும்,அறிவையும் சமயம்,பக்தி எனும் பெயரால் மழுங்கடித்துவிட நாம் அனுமதிக்கமுடியாது.இதிலிருந்து என்று நாம் விடுபடுகிறோமோ?அன்றுதான் தமிழர்க்கு உண்மையான விடுதலை! எதிர்க்கட்சியிலிருந்து கருணாநிதி பேசியதெல்லாம் தற்போது மறந்துவிட்டார். சோ தமிழீழ ஆதரவாளர்களையே மிரட்டுகிறார் பார்ப்பனர்கள் சகலரும் மனதளவில் இணைந்து நமது தமிழர்களது ஒற்றுமையை குலைத்துவருகின்றனர்.இந்த ஆதிக்கசக்திகளை நாமாகஉணர்ந்து முறியடித்தே தீரவேண்டும்.

ஈழம்பிரச்சனைக்கு அரசியல்தீர்வே சரியானது!இராணுவ தீர்வு இலங்கையரசுக்கே முடிவில் தோல்வி தரும். தமிழகமீனவர்கட்கு சிங்களபடைகளால் ஆபத்து கூடுகிறது.பலர் இறந்துள்ளனர்.இங்கே எதிர்நடவடிக்கைகள் கிடையாது.சிங்களபடைகட்கு இந்தியபடைகள்,இந்தியஅரசிடம் எதுவித பயமும் கிடையாது.தமிழர் வாழ்வுசிறக்க தமிழரல்லாதவர் தலைமையை நாம் மறுக்கவேண்டும்.தமிழர்களிடையே உள்ள எட்டப்பர்கள், சுரண்டல் பேர்வழிகளை நாம் இனம் கண்டு நமது ஒற்றுமையை பேணினால்தான் தமிழர்வாழ்வு உலகில் சிறக்கும்!

இவ்வாறு கூறிய இரா.அழகிரியின் கருத்துகளை ஆழமாகசிந்தித்துஉயர்வோம்!—**புதுச்சேரி. ச. வேல்முருகன்**

ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; வ.சத்தியவான்; ஜேர்மனி:க.செந்தில்;0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கேட்டீர்களா சேதி!

1.இலங்கையில் சிங்களஅரசு,எதிர்க்கட்சியான ஐக்கியதேசியகட்சிக்குமிடையே இனப்பிரச்னைகுறித்து,ஒருபுரிந்துணர்வு வரவும், சமாதான பேச்சு,அரசியல்தீர்வுகிட்டவும் பிரிட்டிஷ் பிரதிநிதி கொழும்பு சென்று பேசியதை தமிழர்கள் வரவேற்றுள்ளனர்.இது புலிகளின் சாணக்கியத்துக்கு எடுத்துக்காட்டு என இந்து பத்திரிகை பாராட்டியுள்ளது.ஒரு சிங்களபிரமுகர், இது 3லட்சம் பிரிட்டிஷ்தமிழர் வாக்கைபெற நடக்கும்சதி எனகூறியதுடன்,புத்தபிக்குகள் பிரிட்டிஷ்தலையீடு,தேவையில்லை என எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.தானும் செய்யான்!பிறர்உதவிசெய்வதையும் விடான்!என்ற புத்தபிக்குகளின் நாசகாரப்போக்கை உலகத்தமிழர்கள் கண்டிக்கிறார்கள்.தமிழர்கள் பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்கே தம்வாக்குகளை அதிகம் அளித்ததாக எமது லண்டன் இணைப்பாளர் தெரிவித்தார்.

2.இந்தியாவில் காங்கிரஸ்–சீதாராம்கேசரியால் தேவகவுடா பதவியை இழக்க,அடுத்த பிரதமராக மூப்பனாருக்கு,தமது ஆதரவு! என கேசரி கூறியதால் மூப்பனார் முதலாவது இந்தியதமிழ்பிரதமராக வருவார்,என உலகத்தமிழர்களால் எதிர்பார்க்கப்பட்டது.ஆனால் இந்தர் குமார் குஜ்ரால் கூட்டணிநிர்வாகத்தால் தெரிவுசெய்யப்பட்டார்.இதனால் தமது தமிழ்மாநிலகாங்கிரஸ், அமைச்சரவையில் பங்குகொள்ளாது! என நிர்வாககுழு முடிவெடுத்தது.இந்தியாவிலேயே அதிக புகழ்பெற்றநிதிஅமைச்சராக விளங்கி உலகத்தமிழர்கட்கு பெருமைசேர்க்கும்,ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற ப.சிதம்பரம் அவர்களையும்,மற்ற தமிழ்மாநிலகாங்கிரஸ் அமைச்சர்களையும் மீளவும் அமைச்சரவையில் சேர்ந்து பணியாற்றும்படி குஜ்ரால் அன்புடன் வேண்டியுள்ளார்.அவரது கருத்தை ஏற்று தமிழ் மாநிலகாங்கிரஸ் மீண்டும் மத்தியில் பணிபுரியவேண்டும் என்பதே,உலகத்தமிழர்களினதும் அவா!

3.நோர்வேயில் 1997 செப்டம்பரில் பாராளுமன்றதேர்தல் நடைபெறஉள்ளதால் இங்குள்ள 8000 தமிழர்களில் பலர்(சுமார் 5000பேர்)பிரசாஉரிமைபெற்றுள்ளபடியால் வாக்குரிமையை நல்லமுறையில் பயன்படுத்துவார்கள் என நம்பப்படுகிறது. நோர்வேயில் வாழும் சகலசிறுபான்மையர்க்கும் சமஉரிமை,சமசந்தர்ப்பம்,சட்டஉயிர்பாதுகாப்பு,தம்மொழி,கலாசாரத்தை பாதுகாப்பதுடன் நோர்வேஜியருடன் அமைதியான,நட்புறவான,பரஸ்பர மதிப்புள்ள வாழ்க்கை என்பவற்றை ஏற்றுக்கொள்ளும்கட்சிகளுக்கே(தொழில்கட்சி,சோசலிசஇடதுசாரி,இடதுசாரி,செந்தேர்தல்அணி,மத்திய,கிறிஸ்தவ மக்கள்கட்சி)தமிழர்கள் தம்வாக்கை அளிப்பர் என்ற கருத்துநிலவுகிறது.தமிழர் அமைப்புகள் தேர்தல்முன்பாக முக்கியகட்சிகளை சந்தித்து இலங்கையில் அமைதிவர அவர்கள் பணி என்ன?என்பதை அறிவதும்,தமிழர்க்கு நீதி,அமைதி,உதவி கிட்ட அவர்கள் உண்மையில் உதவுவார்களா? என்பதையும் அறிந்து நோர்வே தமிழர்கட்கு தேர்தல்முன் அறியத்தருவது முக்கியம்.சரியான கட்சிக்கு தமிழர்கள் தம்வாக்குகளை அளிப்பது மிகமுக்கியம்.

4.நோர்வேயில்,சிறுபான்மையரைஒதுக்கல்,கடும்போக்கைகடைப்பிடித்தல்,எனும்,கொள்கையுள்ளோரையும்,நீதி,சமஉரிமை வழங்கவேண்டும்,எனும்கொள்கையுள்ளோரையும்திருப்திப்படுத்த அரசும்,அரசியல்வாதிகளும் சந்தர்ப்பவாததீர்வுகளை நாடாமல் நீதியான,நீண்டநோக்கான தீர்வுகளை வழங்கவேண்டும்,என அண்மையில் நடந்த சிறுபான்மையர் கருத்தரங்கில் நோர்வே சூழல்,அபிவிருத்தி மன்ற இயக்குனர்:எஸ்.அனந்தகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

5.சுவீடன் தலைநகர் ஸ்ரொக்கோமிலுள்ள இலங்கைத்தூதரகத்தில் நோர்வே,டென்மார்க்,சுவீடனில் உள்ள இலங்கையர்களின்,இலங்கைகடவுச்சீட்டை புதுப்பித்தல்,பிள்ளைகளின் பெயர்பதிதல் போன்றவை,நேரே செல்வோர்க்கு உடனேயே செய்துகொடுக்கப்படுவது பற்றி பலர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.முன்பு போல் அல்லாது விரைவாகவே தபால் மூல விண்ணப்பங்களும் கவனித்துஅனுப்பப்படுகின்றன.இதற்காக இங்கு மிக துரிதமாகவும் பண்பாகவும் பணிபுரியும் சாவகச்சேரியை சார்ந்த திரு.ராஜகோபாலபிள்ளை அவர்களை பல தமிழர்கள் பாராட்டுகின்றனர்.ஆனால் புதிய கடவுச்சீட்டையும் (தற்போது விண்ணப்பம் கொழும்பு சென்றுவரசிலமாதங்கள் ஆகும்)இங்கேயே உடன் வழங்கினால் சிரமம் குறையும் என பலர் கருதுகின்றனர்.திருமணம் புரியஉள்ளோர் சான்றிதழ் பெறவும்,வெளிநாட்டமைச்சு அத்தாட்சி தேவை என்பது மாற்றிஅமைக்கப்பட்டு அரசாங்கஅதிபர் அத்தாட்சியே போதுமானதாக இருப்பின்,பலருக்கு,கால,நேர,பண,தொலைபேசிவிரயங்கள்,மனஉளைச்சல் தவிர்க்கப்படும்,என்பதும் குறிப்பிடத்தக்கது.

6.இலங்கைக்கு கணிசமான அந்நியச்செலாவணியை(60லட்சம் டாலர்) வெளிநாடுகளில்வாழும் 50லட்சம்இலங்கையர் அனுப்பிவருவதாகவும் இந்தப்பணம் கொழும்பு,தென்பகுதிக்குமட்டும்பயன்படுத்தப்படுவதாகவும் யாழ்ப்பாணம்சென்று திரும்பிய,தமிழகமுன்னாள்எம்.பி. திரு.மணிசங்கரஜயர் குறிப்பிட்டுள்ளார்.தமிழர் அனுப்பும் பணம் தமிழரை அழிக்க குண்டு வாங்கபயன்படுவது,குறித்துபலரும்கவலைதெரிவித்தனர்.தமிழர்,இதுகுறித்துஇனி,விழிப்பாகஇருக்கவேண்டும்

7கேரளாவை சேர்ந்த அருந்ததி ரோய் என்பவர் இந்தியாவில் பெண்கள் அடக்குமுறை,அவலவாழ்வு குறித்து மிக மிக கண்டனத்துடன் எழுதிய ஆங்கிலநாவலுக்கு பிரிட்டிஷ்,ஹார்பர்கொலின்ஸ் பதிப்பகம் 2.5லட்சம் டாலரும், அமெரிக்க,றண்டம்ஹவுஸ் பதிப்பகம் 1.6 லட்சம் டாலரும் வழங்கியுள்ளன.(The God of small thing/Aruntadhi Roy)

டென்மார்க்:ச.யோகேந்திரம்:வ.க.பரமநாதன்: பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.:சுகந்தி தில்லையம்பலம் யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்;

www.tamilarangam.net



8.நோர்வேயில் சுமார் 280 அரசியல்தஞ்சம்கோரிய தமிழர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்ப முயற்சிகள் நடந்தது. திரு.சச்சி மயில்வாகனம் தலைமையிலான தமிழர்நடவடிக்கைகுழு உடனே துரிதமாகச் செயல்பட்டு நோர்வே பாராளுமன்றபிரதிநிதிகளைச்சந்தித்து இலங்கைநிலைமையை அறிந்துவரும்படி கேட்டது. இடதுசாரி,சோசலிசஇடதுசாரி,செந்தேர்தல்அணி,கிறிஸ்தவமக்கள்கட்சி,மத்தியகட்சி பாராளுமன்றஉறுப்பினர்களுடன் புளோரோ நகரமுதல்வரும்,நோர்வே அரசியல்தஞ்சங்கோருவோர்க்கானஅமைப்பின்,2பிரதிநிதிகளும் சேர்ந்து இலங்கை செல்ல தீர்மானித்து விசாவுக்கு விண்ணப்பித்தனர்.தமக்கு வேறு முக்கியஅலுவல்கள்(வன்னி முற்றுகையோ??) இருப்பதால் நேரமில்லை!விசா வழங்கமுடியாது!என சிங்களஅரசு கைவிரித்துவிட்டது.அதனால் அதிருப்தியுற்ற பாஉ.க்கள் வெளிநாட்டமைச்சின் செயலர் யன் ஏகலாந்த்திடம் முறையிட்டனர்.அவரது முயற்சியும் சரிவரவில்லை.நோர்வேயிடம் பாரியஉதவிபெறும் ஒருநாடு இப்படி –இடக்குமுடக்காக–நடப்பதையிட்டு அவர்கள் சந்தேகக்கண் கொள்ள தொடங்கியுள்ளனர்.தமிழரை இப்போது அனுப்பவேண்டாம்! பாதுகாப்பில்லை! என அவர்களே அரசை கேட்டதுடன்,வெளியுறவுஅமைச்சும் தம் அதிர்ச்சியை –ஆப்ரன்போஸ்ரன்–தேசியநாளிதழ் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.வழமையில் நோர்வேஜியருக்கு 30நாள் விசா இலங்கைவிமானநிலையத்தில் உடன் வழங்கப்படும், எனினும் பாஉ.க்கள்,இராசதந்திரிகள் இலங்கை வர விசா அனுமதி பெறவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. பர்மா அரசுபோல் இலங்கையரசும் கொடியஅரசுதானோ!என அவர்கள் எண்ணத்தொடங்கியுள்ளமைக்கு விசாமறுப்பு முக்கியஅடிக்கல்லாக அமைந்துள்ளதாக பலர்கருத்துதெரிவித்தனர்.மத்தியகட்சி பாஉ.,விசாமறுப்பு,இலங்கைஅரசிடம் ஒழிப்புமறைப்புள்ளதாகவே சந்தேகப்படவைத்துள்ளது,என கூறியுள்ளார். நோர்வேக்கும்,இலங்கைக்குமிடையே இராசதந்திர,அபிவிருத்தி,நல்லெண்ணஉறவுகளை,இவ்விசாமறுப்பு பாதிக்கலாம்,என பலர் கருத்துதெரிவித்துள்ளனர். எனினும் தம்–உண்மையறியும்பயணத்தை–தொடரப்போவதாகவும்,கட்டுநாயகா விமானநிலையத்தில் நிறுத்தப்படின் அதற்கான பதில் நடவடிக்கைக்கும் தாம் தயார்!எனவும் நோவாஸ் பிரதிநிதி யன் யோர்கன்சன் தெரிவித்துள்ளார். சமிரேயில் அமெரிக்காகுதித்ததுபோல் யாராவது,வலியஅரசு, ஐ.நா. இலங்கையரசை தட்டிக்கேட்டாலன்றி அவர்கள் வழிக்கு வரமாட்டார்கள்!தமது–மோடயா–கொள்கையையே பின்பற்றி உலகம்முழுதும் தமிழ்அகதிகளைஅடித்து கலைத்துக்கொண்டே இருப்பார்கள்!தமிழ்அகதிகள் அனுப்பும் காசால் தம்வயிறை வளர்த்தும்,ஆயுதம்வாங்கியும் ருசிகண்டு கொண்டார்கள்.இது மேற்குஅரசுகட்கு எங்கே விளங்கப்போகிறது?என ஒருசிலர் வினவுகிறார்கள்.

9.நோர்வே,ட்றம்மன் தமிழர்நட்புறவுக்கழகத்தினரால் புத்தாண்டுவிழா அண்மையில் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. சிறுமியரின் அவ்வைசண்முகி நடனம்,சிறுவர்பாட்டு,சிறுவர்வயலின்,பியானோ,பெண்கள் பாட்டு,மனிதவாழ்வுக்கு சமயம் அவசியமா?எனும் விவாதஅரங்கு,பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சியும் கலகலப்பாக இடம்பெற்றன.

10. மே தின தொழிலாளர் தினத்தன்று ஊர்வலம்,பொதுக்கூட்டம் நோர்வேயின் பல நகரங்களில் நடைபெற்றன. ஒஸ்லோவில் முன்னேற்றக்கட்சிதலைவர் காளி காகன் குடியேறியோர்க்கு எதிராகபேசியபோது,முட்டைஅடிக்குள்ளானார்.அவர் இன்று பொதுக்கூட்டத்தில் சுடப்படுவார்!என உயிருக்கு மிரட்டல் போனதால் பொலிசார் கடும்பாதுகாப்புவழங்கினர். தமிழர்ஒருங்கிணைப்புகுழு அனுசரணையுடன் பல தமிழர் ஒஸ்லோவில் தொழில்சங்க ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.ட்றம்மனில் தமிழர்களும் மே தின ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.பிரதம பேச்சாளராக முன்னாள் பிரதமரும்,தொழிற்கட்சி பாஉ.வும்,உலகசுகாதாரதாபன தலைவராக போட்டியிடும் திருமதி.குறுகாலம் புறுண்லாந்த் கலந்துகொண்டார்.அவரை சர்வதேசதமிழர்–ஆசிரியர்,சந்தித்து,நோர்வேவாழ் சகலதமிழர்கள்,சார்பிலும் மேதின வாழ்த்துகளைத் தெரிவித்தார்.அதற்கு அவர் நன்றிதெரிவித்தார்.புதியபிரதமர் யக்லாந்த் பதவியேற்றபோதும் சகலதமிழர்கள் சார்பிலும் சர்வதேசதமிழர்–ஆசிரியர் வாழ்த்து தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

11.குழந்தைவளர்ப்புபற்றி நோர்வேஆய்வாளர்கள்,தெரிவித்த,தமிழர்களும்கவனிக்கவேண்டிய,முக்கியமானகருத்துகள்: 1.பிள்ளைகட்கு மதிப்பும்,கவனிப்பும் வழங்கல் 2.பெற்றோர் தம்மீதும்,தம்கருத்துகளிலும் நம்பிக்கை 3.பெற்றோர் தம் அறிவுக்கணிப்பை நம்புதல் 4.திறந்தமனப்பான்மை 5.உங்கள் இலட்சியங்கள்,ஆசைகளை பிள்ளைகட்கு புகுத்தமுயற்சிசெய்தல் கூடாது 6.பிள்ளைகள் விருப்புக்கு மரியாதை 7.கலந்துபேசுதல் 8.கேட்டலும்,சம்பாசணையும் 9.கவனத்தில் எடுத்தல் 10.உங்கள்சுயவிளக்கத்துடன் அணுகுக 11.ஒழுக்கரீதியான,சமூகரீதி,அரசியல்ரீதியான பிரச்சனைகளில் சரியானகருத்தைவெளிக்காட்டல் 12.சேர்ந்துவாசித்தல்,சுயசிந்தனைவளரஉதவல்,சுயமனிதனாகவளரஉதவல்.

12.ஒஸ்லோவில் சில வன்முறைச்சம்பவங்கள் ஒருசில,தமிழர்களால் அண்மையில்நடைபெற்றதை சகல நீதி,நல்லெண்ணம்,அமைதி,சமாதானம்பேணும் தமிழர்களும் கண்டிக்கிறார்கள்.கிறிமினல் குற்றம்புரிவோர்,புரியமுயற்சிப்போர் விடயத்தில் பொலிசார் மிகக்கடுமையுடன் நடப்பரென்றும்,குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களது நிரந்தர,தற்காலிக வதிவிடஅனுமதி,பிரசாஉரிமைகள் இரத்துசெய்யப்பட்டு,நாட்டின் அமைதி,பாதுகாப்புகருதி தத்தம் நாடுகட்கு திருப்பிஅனுப்பப்படுவர்! எனவும் அறியவருகிறது.வெளிநாட்டார் குற்றம் இந்தநாட்டில் பெரும்பாரதூரமாகவே கருதப்படுகிறது.கத்திக்குத்து,வாள்வெட்டு,ஆயுதங்களால்மிரட்டல்,கொலைமிரட்டல்,பெண்கள்,குழந்தைகட்கெதிரான வன்முறை,சட்டரீதியற்ற பிரமிட்,சீட்டுபிடிக்கும்,வட்டிக்குகொடுக்கல்–வாங்கல் முறைகள், ஆட்கடத்தல், திட்டமிட்டகடைஎரிப்பு,கார்,வீடுகாப்புறுதிமோசடிகள்,கொள்ளை,சமூகசேவைகந்தோர்மோசடி,காப்புறுதிகந்தோர்மோசடி, வர்த்தக,வரி மோசடிகள் என்பனபற்றி பொலிசார் மிக அவதானமாகவே வெளிநாட்டவரை அவதானிக்கிறார்களாம்.

மாத்தளை: தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி .செ.கனகரத்தினம் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்; இரா.கனகரத்தினம் அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்;அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**20ம் நூற்றாண்டு தமிழ்கவிதைகள்:நாமக்கல் கவிஞர்.....பேராசிரியர் வ.மாசிலாமணி**

பாரதிகாலத்தில் வாழ்ந்து,பாரதியைவிட இருமடங்கு வாழ்ந்து,வாழ்ந்த காலத்திலேயே சீரும்,சிறப்பும், பெருமையும், அரசாங்க கௌரவமும் பட்டங்களும் பெற்ற பாக்கியசாலிக்கவிஞர் தான் நாமக்கல்லார்!

1888ல்பிறந்து 1972ல் காலமாகி 84ஆண்டுகள் வாழமுடிந்ததால்,சுதந்திரப்போராட்டத்திலும் ஈடுபட வாய்ப்பு கிட்டியது.சுதந்திரகீதங்களை நாடகமேடையிலும்,அரசியல்மேடையிலும் அள்ளித்தரமுடிந்திருக்கிறது.சிறைசெல்லமுடிந்தது.சத்தியாக்கிரகசாதனையில் முன்னிற்கமுடிந்தது. இங்கெல்லாம் சிந்தியவியர்வைக்கு~வித்துக்கு~விளைச்சலான பாராட்டுகளும்,பட்டங்களும் ஓரளவாவது பெறமுடிந்தது.முதல்அரசவைக்கவிஞர்.பத்மபூசண்.சாகித்யஅகாடெமி நிர்வாகக்குழு உறுப்பினர்,மேலவை உறுப்பினர்-பரவாயில்லை,தமிழ்மக்கள் கவிஞரை-ஒரு சொல்லேர் உழவனை~அதிகம் வாடவிடவில்லை.எனினும் பாரதியின் கவித்திறத்தில் பாதிதான் இவர் எனலாம்.பாரதி ஓடிக்கொண்டும்,குதித்துக்கொண்டும்,அவசரஅவசரமாக வேலிகளைத்தாண்டிக் கொண்டும்~அரசாங்கமும் வாழ்க்கையின் அத்தியாவசியங்களும் அவரைத்துரத்திக்கொண்டே தான் இருந்தன- எழுதியகவிதையை இவரோ,ஆறஅமர நடந்துகொண்டுதான் செய்திருக்கிறார். எனவே தான் பாரதியிடம் காணப்பட்ட துடிப்பும்,துள்ளலும்,எழுச்சியும்,முழக்கமும் இவரிடம் இல்லை.சாந்தமும்,மென்மையும்,சமாதானமும் பேசிக்கொண்டு பூவாடை போர்த்திக்கொண்டு,பொறுமையாக நடந்துபோகும்.மோகனூர் காவிரிதான் நாமக்கல் கவிஞர். இவர் கவிதையின் உயிர்ப்பு:காந்தீயம்,தேசீயம்,சமரசசன்மார்க்கம்,கூட்டுறவு,நாட்டுறவு,குளிர்தமிழ்,குலவுதமிழ்.

'கத்தியின்றி,ரத்தமின்றி,யுத்தமொன்று வருகுது!
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'

என்ற வரிகள் ஒருகாலத்தில் காந்தீயவாதிகளின் காயத்திரி மந்திரம்.

'கன்னி இமயமலை கடலிடைநாடு கடவுள் எமக்கெனக் கட்டியவீடு
என்ன முறையிது ஏனிதை வேறு இன்னொரு நாட்டினர் ஆள்வது கூறு'

இது தேசியக்கீற்று!

சூரியன் வருவது யாராலே? சந்திரன் திரிவதும் யாராலே?
காரிருள் வானில் மின்மினிபோல் கண்ணில் படுவன அவையென்ன?
யாரிதற்கெல்லாம் அதிகாரி?.........கவிதையின் சந்தத்தையும்,சிக்கலில்லாத ஆற்றொழுக்கு

நடையையும் கவனிக்குப்பாருங்கள்.பூக்கள்நகர்வதுபோன்ற ஒருபொலிவு இந்நடையில் உண்டு.

தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவர்க்கோர் குணமுண்டு!
அமிழ்தம் அவனுடைய வழியாகும்! அன்பே அவனுடை மொழியாகும்!

ஆயிரக்கணக்கிலல்ல,கோடிக்கணக்கில் மக்கள் பாடிப்பாடி மகிழ்ந்த பாடல் இது.இதற்கு மலைக்கள்ளன் சினிமாவும் ஒரு முக்கியகாரணம்.

நாளும் கிழமையென்று நல்லவர் உரைத்தாலும்
நாளைக்கு ஆகட்டும்! வேலை அதிகம்! என்பாய்!
பாழும் பணத்தைத் தேடிப் படும்பாடு கணக்கில்லை!
பகவானை எண்ணமட்டும் அவகாசம் உனக்கில்லை!

இது கவிஞரின் ஆழ்ந்தகடவுள் பக்திக்கு ஒரு அளவீடு.

இருபதாம் நூற்றாண்டு இயந்திரயுகத்தில் பட்ட தொல்லைகள் தொட்டு எழுதியபாட்டு இது.

லாரி ஓட்டிவரும் நண்பா!~வெளிச்சம் மாறக்காட்டுவதில் வம்பா?
நேரில்நெருங்கிவிழி கூசும்-விளக்கை நிறுத்தி உதவாமை மோசம்!

பாரதி ஒரு தீச்சுடர்,நாமக்கல் கவிஞர் ஒரு அகல்விளக்கு!பாரதி அருவி,நாமக்கல்லார் ஒருஆறு! பாரதி ,திலகரின் கனல் எனில்,நாமக்கல்லார். காந்தியடிகள் தமிழில்எழுதிய கவிதை எனலாம். பாரதியை நினைக்கும்போது,ராஜபாட்டையில் நான்கு புரவித்தேரில் மீசையை முறுக்கிக்கொண்டு செல்லும்,சூரியகுமாரன் நினைவு வரும்.அந்தத்தேரின்பின்னால்,சாட்டையை சொடுக்கிக்கொண்டு சனங்களை முறைப்படுத்தும் குதிரைவீரன் தான் பாரதிதாசன்!இந்த ஊர்வலத்தில் தம்புரா வாசித்துக் கொண்டு,தம்மை மறந்து, மோன நிலையில் போகும், யாழ்ப்பாணர்கள் தான் நாமக்கல்லாரும்,கவிமணி தேசிகவிநாயகமும் ஆவர்!

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புரூணை: வி.எஸ்.சிவகுமார் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் ,அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திரசேகரன்: ,யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

www.tamilarangam.net



## சர்வதேசதமிழர் கவியரங்கு

**வெற்றி மலைபோல்**

**குவிவதைப் பாரும்!**

நெஞ்சை நிமிர்த்துவீர்
தமிழர்களேயினி
நேருக்குநேர்நின்று பார்ப்போம்
—ஈழப்
பகைவரைப்போரிட்டுத்
தீய்ப்போம்—அன்று
பாராண்டதமிழினம்
அகதியாய் அலைகின்ற
காட்சியை தலைகீழாய்
சாய்ப்போம்—இழந்த
ஆட்சியை மாட்சியை
மீட்போம்!
விலங்கெனத்தமிழரை
சிறைகளில் பூட்டியே
வாட்டியகொடுமைகள்
போதும்!—அதை
மாற்றிட ஓரணிசேரும்!—ஈழ
விடுதலைஒன்றேதான்
தமிழரின் குறியென
நாட்டிடவே படைகூடும்
—உணர்
வூட்டிடவே கவிபாடும்!
பூனைபோல்வந்துமே
யானைப்படைக்குள்ளே
புகுந்துமே ஏய்த்ததுபோதும்
—வங்க
பூமிக்கேநில்லாதுஓடும்—இங்கு
மானமேபெரிதென்ற வள்ளுவன்
—வழிவந்த
மல்லர் தம்போர்க்குரல் கேளும்
—வெற்றி
மலைபோலகுவிவதைப்பாரும்!

**தமிழக உணர்ச்சிக்கவிஞர்**
**சிங்காரவேலவர்—திருச்சி—2**

---

**பெண்ணே....!**

உறுதியும் உண்மையும்
உன்னுள் நிறைந்திருக்கிறது!
தயங்காது நடைபோடு
தேடிவரும் வெற்றிஉன்னை!
மகளாக,மனைவியாக,தாயாக
மட்டுமே
உனைப்பார்க்கும் ஆணாதிக்க
சமூகத்தில்
உன்னைநீயாக நிலைநிறுத்திக்
கொள்ளதவறிவிடாதே
பாசம்,கடமை என்ற
முகங்களின் பின்னே உன்
நிசமுகத்தை நிரந்தரமாக
அமிழ்ந்துபோகவிட்டுவிடாதே!
ஆண்உலகத்தை ஆளும்
வல்லமையுடன் படைக்கப்
பட்டிருக்கலாம்,
ஆனால் அவனையே இந்த
உலகுக்குத்தருபவள் நீதான்!
நிமிர்ந்துநில் நீ! நிச்சயம்
உயர்வு பெறுவாய்!
முதுகில் சுமைகள்
அழுத்துகிறதென்று
குனிந்து நின்று
குமுறிஅழாதே!
கொஞ்சம் நிமிர்ந்துபார்
வானம்தூரத்தில் இல்லை!
நீ நினைத்தால் —அது
தொட்டுவிடும் தூரம்தான்!
தாயின்அன்பை தராசின்
ஒருபக்கம்வைத்துவிட்டு
உலகத்தை தூக்கி
மறுபக்கம் வைத்துப்பார்!
அப்போது நீ வியப்பாய்,
உலகம் எப்போ எடை
இழந்ததென்று?

**தங்கம்-ஒஸ்லோ**

---

**எது கொடுமை....?**

கொடுமை என்றசொல்லுக்கு
கொலைஅல்ல அர்த்தம்
தீமைஎனும் தீர்வையிலே
அதற்குமோர் விலையுண்டு
இதயமற்றுப்பொய்யுரைத்து
இடறுபல புரிந்து
இரக்கமற்று மனமுடைய
இம்சிப்பதுவே கொடுமை!
தயக்கமின்றிப்பிறர்பொருளை
தனதாக்கிக்கொள்வதற்கு
தலையுடைத்து திட்டமுடன்
தவறுவிடல் பெருங்கொடுமை!
ஆசைகொண்டு அடுத்தவனின்
அன்பினளை அபகரித்து
மோகமுடன் இச்சிப்பது
காமுகரின் இழிகொடுமை
நல்லோரைக்கூசாமல்
நாவழிய வசைகூறி
நயங்கெடப்பேசுகின்ற
நடத்தையுமோ மிகக்கொடுமை
கொன்றுவிடும் குறியால்
குற்றமுண்டே யாயினும்
மன்றில் அதன்தீமை
மனிதஉயிர்க்கில்லை!,

**ஆரையம்பதி சபாரத்தினம்**

---

**எதுபோனால் எதுபோச்சு?**

ஆடைபோனால் மானம்போச்சு
பல்லுப்போனால் சொல்லுப்போச்சு
பணம்போனால் பந்தம்போச்சு
பதவிபோனால் மதிப்புபோச்சு
தந்தைபோனால் தைரியம்போச்சு
மனைவிபோனால் மகிழ்ச்சிபோச்சு
அம்மாபோனால் அனைத்தும்போச்சு!

**மதுரை இரா.இரவி**

(கவிஞர் மதுரை இரவியின் கவிதைச் சாரல் தொகுப்பு வெளிவந்துள்ளது. வெளியீடு:இர.ஜெயசித்ரா,7ஏ,இருளப்பகோனார் சந்து;வடமாசிவீதி,மதுரை62500.1 விலை.15ரூபா A/c.26858,Grand Central Canara Bank,Madurai,India)

---

**அழகு! அழகு!!**

ஆடல்கலையில் இவள்வாணி—இதை
அறிந்து இரசிப்பது தனிப்பாணி
ஆடத்தெரிந்திடும் மேனி—பல
ஆடவர்கண்ணுக்கு இதுதீனி
கூந்தல்சுமந்திடும் பூக்கள்—இளம்
கோனுக்கு தினம் மனுதாக்கல்
காந்தவிழிகட்டும் பாக்கள்—காளையர்
கட்டுண்டு மொய்த்திடும் ஈக்கள்
கயல்விழி பாய்ச்சிடும் பார்வை—நாணி
காளையர் சிந்திடுவார் வேர்வை
இயற்கை அழகிட்ட போர்வை—கண்டார்
இழப்பார் தம்மவர் சோர்வை!
பட்டுச்சேலையை கட்டி—பலர்
பார்வையை ஈத்திடுவாள் எட்டி
கட்டுக்குலையாத திட்டு—கம்பன்
கவியில் சுவைத்த லட்டு!

**வ.க.பரமநாதன்,டென்மார்க்**

---

**நண்பிக்கு நன்றி!**

நட்புக்கு புதுவரைவிலக்கணம்
கற்பித்த என் தோழியே!
நட்பு என்பதற்கு உன்அகராதியில்
அர்த்தம் தான் என்னடி?
ஏமாற்றவென்றே நீ
ஆரம்பித்தாயோ இந்தஉறவை!
அடுத்தவரிடம் அடிபட்ட வேதனையை
கூட உன்னிடம் கூறிவைத்தேன்!
அப்போதுகூட உண்மையாய்நடக்க
ஏனடி தோன்றவில்லை?உனக்கு
பழகியவர்களில் பலர் போலிகள் என
காலம் செல்ல உணர்ந்தேன்!
அந்தப்போலியில் நீயில்லை!என
எனக்குள் இருந்தது இறுமாப்பு!
அனைத்தும் ஒருநாள்பொய்யாக்கினாய்
வெந்தது நட்புமட்டுமல்ல!
என்மனமும் தான்!

**செல்வி.வதனன்,ஒஸ்லோ**

---

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சமாதானம்

ஆயிரம் கண்கொண்ட கூரையினூடு
ஆதவன் எட்டிப்பார்க்கிறான்.
கல்வீடுகளிலும் கண்கள் – அவை
துப்பாக்கிக் குழவிகளின் கூடுகள்.

எங்கோ அன்னதானம் என்று
உயிருள்ள எலும்புக்கூடுகள்
நடந்தும்,ஊர்ந்தும்
ஊர்வலம் போகின்றனர்.

துப்பாக்கிகள் எல்லாம் துருப்பிடித்துத்
தேடுவாரற்றுக் கிடக்கின்றன.
அவற்றில் ஒன்றை தூக்க முயன்றன
ஆறு எலும்பு மனிதர்கள்
போர்க்கால நினைவுகள் மீண்டபோது.

வியர்வையை விரட்ட
ஆயிரம் ஓட்டை கொண்ட ஆடைக்குள்
எலும்பு மனிதர்கள் பறக்கிறார்கள்.
கச்சையோ கொச்சையாகி – தம்
தேசியக்கொடி போல் உடலெங்கும்

எலிகாலில் ஊரும்.
பூனை பேன் எடுக்கும்
காகம் தோளில் இருந்து
கதை சொல்லும்.
பருந்து பக்கத்தில் இருந்து
பாட்டுப் பாடும்.
இதைவிட சமஉரிமையும் சமாதானமும்
வேறு எங்கு இருக்க முடியும்
விழுந்த சோற்றுப் பாசலை
எடுக்க வலுவற்று விட்டுக்கொடுக்கும்
விசித்திரமான சமாதான எலும்பு மனிதர்கள்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு என்றார்!
அதற்கு இப்படியா எலும்புப் பெண்டிர்?
இவர்கள் பின்னால்
எலும்பு மனிதர்கள் வேறு!

## நோர்வேயில் நக்கீரனார் கவிதைகள்

### காதற்கீதம்

வானச்சாளரத்தினூடு
முகில் திரை விலக்கி
முகம் காட்டும் சூரியனை
வரவேற்று
புள்ளினம் பாடும் பாடல்

### சபதம்!

கடலைக்குடித்து
முடிப்போமென
சபதம் இட்டனவாம்
மீன்கள்!

### கார்

நாலுசில்லில் ஓடும்
ஆணின் இதயம்
இதைத்தானே
பெண்கள் அதிகமாய்
காதலிக்கிறார்கள்.

### நீள்கூந்தல்

பூமித்தாய்க்கு
வியர்வை நீக்கும்
விசிறி.

### மலிவான சரக்கு

பணத்தைக் கொடுத்துப்
பொருளைப் பெறுவோம்.
பணத்துடன் பொருளும்
பெண்ணையும்
கொடுத்தனுப்பும்
உலகின் மலிவான
சரக்கு
தமிழ்ப்பெண்களோ?

### கழுத்தில் தாலி

அனைவரும் அறியத்
தங்கத்தாலியை – ஏன்
தலையில் கட்டுவதில்லை?
அடிக்கடி
கணவனை
நெஞ்சில் தட்டி
நினைவு படுத்தவோ – பெண்ணின்
கழுத்தில் கட்டினர்?

### எங்கே அழகு?

மினு மினுப்பான மிருங்களும்
வர்ணம் கூடிய பறவைகளும்
ஆணினமே!
அலங்காரம் செய்தே
பெண்கள் கூட அழகாய் தோன்றுவர்.
ஆணினம் பின்னால்
அலைய வேண்டியது
பெண்ணினம் தானே?
தன்அடக்கமும், அமைதியும்
அமைந்ததினால்
அலைவது என்றும்
ஆணினமே! – ஆகவே
அழகு
உடலிலா? உள்ளத்திலா?
தன்னடக்கம் கெட்ட பெண்டிரை
என்னவென்றுசொல்ல?

### கலியாணம்

கல்யாணம்
கலியாணமானதேன்
கலியெனும் சனி
ஆணுடன் சேர்வதோ?
அன்றி
கலி ஆணவம்
கொள்வதோ?

### கண்ணீர்

ஆணை ஆடவைக்க
அணங்கு கோர்க்கும்
அழகான முத்துமாலை.

வேதனை வெள்ளம்
கண்வழியே,
வரம்புடைத்துப் பாய்ந்து
நாசியைத் தாண்டி,
கடலில் கலந்து
உப்புக் கரிக்கும்!



## தமிழ் இதழ் ஆய்வு தி.மா.சரவணன் பேட்டி! -ஜான் ராஜ்தேவர்

சோழ மண்ணில், திருச்சிராப்பள்ளி மாநகரில் தமிழ் இதழ்கள் நாளிதழ்கள் முதலியவற்றை ஆய்வு செய்து வரும் தி.மா. சரவணன், மேகம் மறைத்த ஆதவன் போல் பலர் அதிசயப்பட வைக்கும் வகையில் செய்து வரும் தமிழ் இதழ் சேகரிப்பு இடைவிடாமல் கடந்த 14 வருடங்களாக செய்து வருகிறார். இப்படிப்பட்ட தி.மா. சரவணன் அவர்களை சர்வதேச தமிழர் 'நேர்காணல்' மூலம் அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகிறேன். மேலும் 1901-1923 ம் ஆண்டுகள் முதல் உள்ள தமிழ் இதழ்களைப் பற்றி 20ம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள் என்றத் தலைப்பில் எழுதி சென்னையிலிருந்து வெளியாகும் 'ராணிமுத்து' என்ற மாத இதழில் வெளியாகியுள்ள தொகுப்பினை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் உலகெங்கும் இருந்து வெளியான அனைத்து தமிழ் இதழ்களின் பெயரும் காலமும் உள்ளது.

**கேள்வி:** தமிழ் இதழ்களை சேகரிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்தது, எப்படி? அவசியம் என்ன?

**பதில்:** பத்திரிகை என்பது ஒரு மொழியின் ஒரு இனத்தின் உண்மையான சுவடுகளை காட்டக் கூடியது. கலை, இலக்கியம், பண்பாடு என சகல கூறுகளையும் உள் வாங்கி அந்தந்த சூழலில் அப்படியே பதிவு செய்யும் காலக் கண்ணாடி இதழ்கள். தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி, தளர்ச்சி, தமிழ் மொழியின் பன்முகம் என வரலாற்று நிலையில் ஆராய இதழியல் வரலாறு அவசியமான ஒன்று. அந்த வரலாற்றை ஆதார பூர்வமாய் முறையாய் தெரிவிக்க இதழ் சேகரிப்பு மிக அவசியம். பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் சமூகத்திற்கு பயன்படும் விதமாக எதையாவது செய்ய வேண்டும் என்ற கோணத்தில் இருப்பதே என் செயல்பாடுகள்.

**கேள்வி:** உங்களது சேகரிப்பில் இதுவரை எத்தனை இதழ்கள் உள்ளது?

**பதில்:** நான் 1983ம் ஆண்டு முதல் நிதானமாக சேகரித்து வருகிறேன். தற்போது (ஏப்ரல் 1997) எனது சேகரிப்பில் 2,950 வகையான தமிழ் இதழ்கள் உள்ளன. கையெழுத்து ஏடுகள் முதல் கணினி அச்சு வரை திரை, ஜோதிடம், பல்சுவை என பலதரப்பட்ட இதழ்களும் உள்ளன. இதழ் சேகரிப்பாளர்கள் நாளிதழ்களை பதிவாக எடுப்பதில்லை நான் அதையும் முழுதாக சேகரிப்பவன் நான் ஒருவன்தான்!

சர்வதேசதமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீன்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

**கேள்வி:** சேகரிப்பின் அடுத்த கட்டம்?

**பதில்:** முழுமையாக முடிந்த வரையில் சேகரித்து நூலாக்கம் செய்வது

www.tamilarangam.net



**கேள்வி:** இந்த நூற்றாண்டின் இதழியல் வரலாறு, அதன் காரணம் என்ன?

**பதில்:** '20ம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள்' என்றத் தலைப்பில் ஆண்டு வாரியான பட்டியல் தொடரை 'ராணிமுத்து' மாத இதழில் தொடராக எழுதி வருகிறேன். இந்த நூற்றாண்டில் தமிழில் சுமார் 10,000 இதழ்கள் (மேலும் இருக்கும்.) வந்துள்ளன. வேறு எந்த மொழியிலும் இத்தனை இதழ்கள் வந்தனவா? என்பது ஆய்விற்குரியது. இதுவே ஒரு சாதனை என்று சொல்லலாம். 1901ல் 10, 20 என ஆரம்பித்த வரலாறு தற்போதைய ஆண்டுகளில் சுமார் 200 புதிய இதழ்கள் ஒவ்வொரு வருடமும் மலர்கின்றன. பல்வேறு தகவல்களை தாங்கி பலஇதழ்கள் முகம் காட்டுகின்றன. மேலும் 'சிறு பத்திரிகைகள்' என்ற தரமான இதழ்களின் பொற்காலமாகவும் இந்நூற்றாண்டு விளங்குகிறது.

**கேள்வி:** உங்களது சேகரிப்பை துவக்கி வைத்த முதல் தமிழ்நாட்டு இதழ், வெளிநாட்டு இதழ் எது?

**பதில்:** தமிழ்நாட்டு இதழ் செந்தமிழ் மதுரையிலிருந்து வந்தது. இலங்கை இதழ் டொமினிக் ஜீவாவின் மல்லிகை, கோலாலம்பூரிலிருந்து வந்த உதயம்.

**கேள்வி:** வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழ் இதழ்கள் உங்கள் சேகரிப்பில் எத்தனை உள்ளது?

**பதில்:** மிக மிக குறைவாகத்தான் உள்ளது. வெளிநாடுகளில் சுமார் 1,000க்கும் மேற்பட்ட இதழ்கள் உலகெங்கும் இருந்தும் வந்துள்ளது. தற்போது புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் நூற்றுக் கணக்கில் இதழ்களை வெளியிட்டும் வருகின்றனர். இதில் எனது சேகரிப்புகள் சுமார் 100 இதழ்கள் மட்டுமே. இதுவரை கிடைத்துள்ளன. ஆயிரக்கணக்-கான பிற இதழ்களையும் திரட்ட வேண்டியது அவசியமான பணி. வரலாற்று பதிவிற்கு மிக முக்கியமான இதழ்கள் அவை. தமிழர்களின் வாழ்வும் வளர்ச்சியும் தமிழ் நாட்டுடன் மட்டும் இல்லை. கடல் கடந்தும் அவன் முத்திரை பதிக்கப்பட்டுள்ளன்ற சான்றாதாரமாக இதழ்கள் ஒரு உறுதுணை புரியும்

**கேள்வி:** தங்கள் பணியில் நிறை-குறை - உதவிகள் பற்றி?

விளம்பரம்: 1.மகிழ்வான விடுமுறைக்கு மலிவான விமான டிக்கட்டுகள் ஒழுங்குசெய்துதரப்படும்
2.நோர்வேஜிய-தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்புகள்,சகலவிதமான அச்சுவேலைகள்-மலிவாக
3.தமிழ்அகதிகள்சிறப்பிதழ் வெளியிட உங்கள் ஆக்கங்கள்,பன்னாட்டுதமிழ்அகதிகள்விபரம் தருக!
4.தமிழ்க்கலைஞர்கள் தொடர்புறுக! கலைநிகழ்ச்சிகள்,கவியரங்கு,உரைநிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படும்
...32 813416

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து பதியுங்கள்!
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம்!

**பதில்:** இதழ்களை அழிவிலிருந்து காப்பாற்றி பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு பொக்கிஷமாய் தர முனைந்து செயலாற்றி வருகிறேன். என்னளவில் என் பணி பெரும் நிறைவை எனக்குத் தருகிறது. குறைகளை தவிர்க்கப் பார்க்கிறேன். என் பணியைப் புரிந்து கொண்டு என் சிரமத்தை தங்கள் சிரமமாக ஏற்றுக் கொண்டு சேகரிக்க உதவும் இனிய நண்பர்கள், இல்லத் துணைவி என பலரின் உதவிகளும் கிடைக்காவிட்டால் எனது சேகரிப்பு இல்லை. இன்னும் பல நண்பர்களை இந்த தமிழ்ப் பணிக்கு உதவிட தொடர்ந்து அழைத்தும் வருகிறேன்

**கேள்வி:** நூற்றாண்டு இதழ்களை வாசிக்கும் போது தற்போதைய இதழ்களில் தமிழின் நிலைப்பாடு எப்படி உள்ளது?

**பதில்:** வருத்தம் தரும் நிலையில்தான் உள்ளது. ஆங்கிலேயர்கள் ஆண்டபோது வந்த இதழ்களில் கூட தமிழே முதன்மையாக ஒலித்த இதழ்கள் ஏராளம். ஆனால் தற்போதோ, தமிழகத்தில் வரும் பல இதழ்களில் தமிழின் ஆட்சி மிக குறைக்கப்பட்டு பிற மொழி (குறிப்பாக ஆங்கிலம்) கலப்பே மிகுதி. இதில் வேடிக்கை என்னவென்றால், பிற மொழி பேசும் மனிதர்களிடையே வாழும் வெளிநாட்டு தமிழர்கள் தமிழ் உணர்வோடு தம் மொழியைத் தூக்கிப் பிடித்து பெருமையாக அதற்கே முதலிடம் தந்து இதழை வெளியிடுவது மிகவும் மகிழ்வானது வெளிநாட்டு இதழ்களை பார்த்து தமிழ்நாட்டு இதழ்களும் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தந்து மொழி வளர்க்க வேண்டும்.

**கேள்வி:** ஈழப் பிரச்சனைப் பற்றி உங்களது பொதுவான அபிப்பிராயம் என்ன?

**பதில்:** ஒரு இனம் இன்னொரு இனத்தை அழிக்க நினைப்பது கண்டிக்கத் தக்கது. உலகில் எல்லா இனங்களுக்கும் உரித்தான நிலைதான் இது. மனிதன் என்பதின் உள் மனித நேயம் என்ற பொருள் மறைந்துள்ளது. அதை மதித்து ஏற்றுக் கொள்ள அனைவரும் முன் வர வேண்டும். இந்தியச் சுதந்திர போராட்டம் முடியும் போதே ஈழப் போராட்டம் ஆரம்பமாகி விட்டது. 50 ஆண்டுகளாகியும் அது முடிவிற்கு வரவில்லை என்பது மிகவும் வருந்தத் தக்கது. ஈழ மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு புதிதாய் அவர்கள் வாழ்வு துவங்க உலக நாடுகள் ஒன்று சேர்ந்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்

**கேள்வி:** கடைசியாக 'சர்வதேச தமிழர்' இதழ் பற்றி.....?

வெளி நாடுகளில் வரும் தரமான இதழ்களில் இதுவும் ஒன்றாகும். உலகளவில் பரந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பாலமாக செயல் படுவது மிகவும் சிறப்பு. உலக தமிழ் மக்களின் குரல்களை ஒட்டு மொத்தமாக இதழ் வழி அறிய கிடைத்த வாய்ப்பு மதிக்கப்பட வேண்டிய ஒன்று.

நோர்வேயில் தமிழ்மாதச் சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதா தொடர் இலக்க நிலையம்
புளெஸ்கோ.பாரிசில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணனியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள் (பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை) புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

www.tamilarangam.net

www.tamilarangam.net

## நாடும் நடப்பும் ........வழிப்போக்கன்.......

1) பொருளாதார ரீதியாகத் தாக்கப்பட்டவர்கள், தாழ்ந்துபோனவர்களைப் பாதுகாக்கும் முகமாக அமைந்திருப்பவையே சமூகசேவை நிலையங்கள்(சோசியால் கந்தோர்). வேலையில்லாதவர்கள், பிரிந்து வாழும் தாய்மாருக்கும், வசதியற்றவர்கள், அகதிகள் அனைவருக்கும் இந்நிலையம் உதவிசெய்யும். இதைத் துர்ப்பிரயோகம் செய்பவர்களுக்குக் கடும்தண்டனை வழங்கப்படுகிறது. இதில் சில தமிழர்களும் அடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. மேலும் சிலர் தாய்மார்கள் குடும்பமாக வாழ்ந்து கொண்டு பிரிந்து வாழ்கிறோம்! என இருவித்தியாசமான விலாசங்களை கொடுத்து சமூகசேவை நிலையங்களைச் சுரண்டி வாழ்கிறார்கள். இதில் சில தமிழ்த்தாய்மாரும் அடங்குவர். இதைப் பார்த்தால் இரங்கிக் கொடுத்தவன் கையையே அறுப்பது போலாக இருக்கிறது. நம்புகிறவனைத்தானே ஏமாற்றலாம். அதைவிட இத்தாய்மார்கள் ஓரிரண்டு வேலைக்குப் போகும் பெற்றோர்களின் பிள்ளைகளை வீட்டில் வைத்தும் பார்ப்பார்கள். குறைந்த பட்சம் 3000–5000 குரோணர்கள் கறுப்புப்பணமாய் கிடைக்கும். இது ஒரு பெரும் கொள்ளையடிதான். குழந்தை பார்ப்பவர்களைத் தொழில் வாய்ப்பு நிலையங்களும், வரி இலாகாவும் தேடுகின்றனர். பிடிபடும்போது சிறையுடன் பணம் வட்டியும் முதலுமாகக் கட்டவேண்டியிருக்குமாம்.

2) வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் இன்றி தமிழ்வியாபாரத் தலமொன்றில் வேலைசெய்ததால் அகதியாய் இருந்த தமிழர் ஒருவர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். வேலை கொடுத்த முதலாளிக்கும் தண்டப்பணம் அறவிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

3) அநாகரீகமாக அநாமதேயக்கடிதம் ஒன்று ஒஸ்லோவில் அஞ்சல் செய்யப்பட்டுள்ளது. குறிவைத்து ஒருவரின் தலையில் இப்பிரச்சனைகள் போய் விழவேண்டும், அமைப்புகளில் அல்லது அமைப்புகளிடையே பிரச்சனைகளைத் தூண்டி விடவேண்டும், பத்திரிகை ஒன்றை ஓர்புலிசார்ந்த அமைப்புடன் பிணக்கை ஏற்படுத்த வேண்டும் என்பதே இக்கடிதத்தின் நோக்கம் எனச்சந்தேகிக்கத் தூண்டுகிறது. இக்கடிதம் எழுதியவர்களின் கண்ணுக்குச் ஒரு கருத்து சமர்ப்பணம். சிலர் பொதுவாகச் சமூகசேவையில் ஈடுபடுகிறார்கள் என்பதற்காக அவர்களுடைய வாழ்க்கை அம்பலத்தில் நிற்கவேண்டிய அவசியம் இல்லை. எமது தமிழ் சமூகத்தின் ஒரு வழமையான பழக்கம் என்னவெனில் தான் என்ன செய்கிறேன்! என்பது முக்கிய மில்லை மற்றவன் என்ன செய்கிறான்? என்பது தான் முக்கியமானது. தனது மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என எண்ணுபவர்களை நாம் என்ன செய்ய முடியும். இக்கடிதத்தை மையப்படுத்தி சிலர் தமது சொந்தப்பகைகளையும், பிரச்சனைகளையும் இதனூடாகச் சாதிக்க, பழிவாங்க முயல்கின்றனர். இது நீதி, நேர்மை, அற்ற கையாலாகாத தன்மைகளைக் காட்டுகிறது.

4) அநாமதேய தொலைபேசி மிரட்டல்கள் தொலைபேசிப் பயங்கரவாதம் (telefone terror)என அழைப்பார்கள். இது பாரதூரமான குற்றமாகும். இதற்கு மிகக்கடுமையான தண்டனையே வழங்கப்படுகிறது. தொலைபேசியை எடுத்து மூச்சு விடுவது, விசில் அடிப்பது, கத்துவது, பாட்டுப் போடுவது அனைத்துமே தொலைபேசிப் பயங்கரவாதத்தினுள் அடங்கும். இந்த அநாமதேய தொலைபேசிமிரட்டல் பேர்வழிகள் பெண்கள் தொலைபேசியை எடுத்தால் பாலியல் வக்கிரகங்களையும், பண்பு கெட்டதனத்தையும் காட்டுகிறார்கள். மிருகங்களை விடக்கீழ்தரமாக மனிதர்கள் தமிழர்களில் உண்டு என்பதை நிரூபிக்கிறார்கள். ஒரு பிழையான தொலைத்தொடர்பைச் செய்து விட்டோம் என்றால் எமது பெயரைச் சொல்லி இது பிழையான தொலை பேசித்தொடர்பு மன்னிக்கவும் எனக்கூறிவிட்டு வைப்பதே நாகரிகமானதும், வளர்ச்சியடைந்த மனிதன் செய்வதுமாகும். நாம் வளர்ச்சியடைய மாட்டோம்! பிடி பந்தயம்! என்றால் நாம் என்ன செய்யமுடியும்? சட்டத்தின் தண்டனைதான் இதற்கு மருந்து.

www.tamilarangam.net

5) பிரான்சில் எடுக்கப்பட்ட அருந்ததியின் முகம் என்ற படம் அகதிகளின் வெளிநாட்டு வாழ்க்கையை மையம் கொண்டிருந்தது. இது அருந்ததியின் முகமல்ல சில பிரான்சில் வாழ்ந்த சில தமிழ் அகதிகளின் முகங்கள்தான் அவை. இது ஒரு துணிகரத்தயாரிப்பு. ஏனெனில் அரை குறை ஆடைகளுடன் அம்பலத்தில் ஆடிவரும் பெண்களையும், ஆடம்பரமான காட்சிகளையும், டுசும்டுசும் சண்டைக்காட்சிகளையும் கொண்ட பிரமாண்டமான இந்தியப்படங்களிடையே இது எதுவிதமான, பெண்கதாபாத்திரங்களையும் கொள்ளாமல், ஆடம்பரமில்லாமல், எளிமையாகக் கதை நகர்கிறது. முகமிழந்த மனிதர்களுக்கு முகம், முகம் காட்டியது. சம்பாசணைகளுக்கிடையே உள்ள சூனியங்கள் அளவுக்கு அதிகமாக இருப்பதால் இடைக்கிடை தொய்வுகளைக் காண்பிக்க முயல்கிறது. இனிவரும் படங்களில் இதைக்கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

6) போராளிகளின் இழப்புக்களைக் குறைப்பதற்கே கொரில்லாயுத்தமானது தெரிவு செய்யப்பட்டது. ஒருபோராளி பலசிரமங்கள் மத்தியிலேயே பயிற்றுவிக்கப்படுகிறான் நிதி நெருக்கடி, வசதியின்மை, அரச கெடுபிடிகளிடையே உருவாகிறான். ஒரு கெரில்லாவானவன் நூறு ஆமிக்குச் சமனானவன். வவுணத்தீவு தாக்குதலில் 85 புலிகளும் 100ஆமியும் இறந்ததாக அறியப்படுகிறது. தாக்குதலைப் புலிகள் வெற்றிகரமாக நடத்தினாலும் கூட புலிகளுக்கு ஒருவகையில் தோல்வி உண்டு. தாக்குதலின் போது இறந்த புலிவீரர்கள் சொற்பமே. ஆனால் தாக்குதலின் பின்பும் இறந்தபுலிகளே அதிகம் என அறியப்படுகிறது. ஆயுதப்பெருக்கத்திலோ, பிணக்குவியலிலோ, பணப்பெருக்கிலோ மட்டும் விடுதலை கிடைத்து விடாது. பல மற்றய காரணிகளிலும் விடுதலை தங்கியுள்ளது. தாக்கி மறையும் தத்துவத்தையும், தந்திரங்களையும் தொடர்ந்து கையாண்டு போராளிகளுக்கு ஏற்படும் இழப்பைக் குறைத்துக் கொள்வது முக்கியமாகும். மரபுவழியில்லாமலேயே எதிரி நாட்டைவிட்டு ஓடிய சரித்திரங்கள் உண்டு. கடைசியாக புலிகள்நடத்திய தாக்குதல்கள் இராணுவத்தினதும், அரசினதும் மனநிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது.

7) பாலச்சந்தருடைய கல்கி என்ற சினிமாப் படத்தில் பெண்விடுதலையை மையப்படுத்தி தியாகத்தை முதன்மைப்படுத்தி பெண்ணையும், பெண்மையையும் கொச்சைப்படுத்தப் பட்டிருந்தது. காதலில் நம்பிக்கையில்லாத ஒரு புரட்சிப்பெண்ணாகச் சித்தரிக்கப்படுகிறாள் கல்கி. ஒருபெண் போக்கிரியைப் பழிவாங்குவதற்காக அவனுடன் உடலுறவு கொள்ளுமள விற்கு பெண்கள் உணர்ச்சி எதுவுமற்ற முண்டங்களல்ல. ஒருவனைப் பழிவாங்குவதற்கு பிள்ளையை வயிற்றில் வாங்கித்தான் பழிவாங்கவேண்டுமென்று இல்லை. விருப்பமில்லாது பெற்றோர், சமூக, கௌரவ அழுத்தங்களுக்கு உள்ளாகி வேறுவழியின்றி காலமெல்லாம் விரும்பாதவனுடன் விதியை நொந்து கொண்டு திட்டித்திட்டி வாழலாம் என்ற கலாச்சாரத்தின் கருவில் வந்த கற்பனையா இது? சமூகப்பொறுப்புள்ள படைப்பாளி செய்யும் வேலையா இது? அதுவும் மென்மையான உணர்வுள்ள பெண்ணை இப்படிக் கொச்சைப் படுத்தியது அனுமதிக்கக் கூடியதல்ல. பெற்றோரால் நிச்சயிக்கப்படும் திருமணங்கள் கூட எத்தனையே கலாச்சார வரம்புகளுக்குள், காலங்காலமாக கொண்டு வரப்பட்ட மூளைச்சலவைக்குள், ஸ்பரிச பாஷையின்றி உணர்ச்சிமயமாக்கப்பட்டது. கல்கி விரும்பும், அவளை விரும்பும் ஆண்நண்பனான பரஞ்சோதியின் உணர்வுகளை ஏற்கமுடியாதவள், மறுப்பவள் வெறுக்கும் ஒருவனை ஏற்றுக் கொள்கிறாள். அன்பு, ஆசை, பாதுகாப்பு, உயரிய உணர்வுகளின் அடிப்படையிலேயே ஓர் பெண் தன்னை தன்கணவனிடமோ அன்றிக் காதலனிடமோ கொடுக்கிறாள். உணர்வுகளற்றசடமாக ஆண்களின் விருப்புக்கு மட்டும் இணங்கும் பெண்சமூகமொன்றை உருவாக்கவா விரும்புகிறாரா பாலச்சந்தர். இது ஒரு பிரத்தியேகமான தியாகவெறி கொண்ட ஒரு பெண்ணின் கதையே தவிர பொதுவானது இல்லை என வாதாடலாம் ஆனால் பெண் எனப்பார்க்கும் போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Receiver:

# C-BLAD

Subscription:
Scandinavia: 90,-NKR/ YR
Other Countries:15,-USD

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Jour(U.K)
L.Hervigs vei 69A,3035 Drammen
Norway.Tel/Fax.47.32.813416
E.mail:nsp@oslonett.no

A/C:05320899453,Postbanken,oslo-2

Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet.

அது பொய்யானது. பெண் மென்மையான உணர்வுகளைக் கொண்டவள், அன்பானவள் தாய்மையானவள் அச்சம், நாணம், மடம் பயிர்ப்பு என அவளது இயல்புகளை அடுக்கிக் கொண்டு போகலாம். பெத்தபிள்ளையையே தியாகம் எனச்சொல்லி விட்டு விட்டுப்போய் கூட்டத்தில் நின்று கும்பியடிக்கும் ஓர் அபத்தமான கற்பனை ஏன் பாலச்சந்தருக்கு வந்தது? கல்கியின் சிநேகிதிக்கு பிள்ளைகளில் ஆசை, ஆனால் பிள்ளை பிறக்காது என்றால் தன்காதலனுடன் கூடிப் பிள்ளை ஒன்றைப் பெற்றெடுத்துக் கொடுத்திருக்கலாம். கொடூரமாக நடத்திய தன்மாஜிக்கணவனின் பிள்ளைதான் தனக்கு வேண்டும் என எந்தஇடத்திலும் கதைக்கவில்லை. ஒரு பெண் அதை விரும்பவும் மாட்டாள். அப்பிள்ளையைப் பார்க்கும்போது மாஜிக்கணவனின் கொடுமையான நினைவுகளே நிழலாடும் என்பதை ஏன் பாலச்சந்தர் எண்ண மறந்துவிட்டார். கலியுகத்தின் முடிவு கல்கி அவதாரம் இது இந்துக்களின் நம்பிக்கை. கிருஸ்ண பரமாத்மாவின் கல்கியவதாரம் இப்படி அகோரமான பாலச்சந்தர் காணும் பெண்ணாக இருக்கக் கூடாது எனப் பிரார்த்திப்போமாக.

8) ஈழத்தில் நிலத்திற்கடியில் வைத்தியசாலைகள் கட்டுவதற்காகப் பணவுதவி கோரப் படுகிறது. இது உண்மையிலேயே ஓர் நல்லதிட்டம்தான். எரித்திரிய விடுதலைப் போராட்டத்திலும் இப்படியான வைத்தியசாலைகளே நல்ல முறையில் இயங்கி வந்தன. இவை பாதுகாப்பானவையும் கூட. இவை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பாதுகாப்புவலயங்களில இருப்பது முக்கியமானது. பாதுகாப்பான இடங்கள் கைநழுவிப்போயும் உள்ளன. போராளிகளின் இழப்புகளைக் குறைப்பதற்கே நிலக்கீழ், நடமாடும் வைத்தியசாலைகள் என்றால் பொதுமக்கள் நிலை என்ன?

9) இலங்கைத்தமிழர்கள் மட்டுமன்றி இந்தியத் தமிழக மீனவர்களும் சிங்களபடைகளின் தாக்குதல், கைது, சிறை, சித்திரவதைக்கு உட்பட்டுள்ளனர். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என தமிழக முதல்வர் கூறினால் மட்டும் போதாது. டெல்லியில் சுதந்திரதினத்தன்று யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, விமானப்படையை காட்சிக்கு விட்டால் மட்டும் போதாது. தமிழக அப்பாவி மீனவர்களுக்கு உடனடியாக பாதுகாப்பு அளிப்பதுடன் சிங்களப்படைக்கு சரியான பாடமும் புகட்டாவிடில் நாளை தமிழ் நாட்டிலும் இவர்கள் தம்கைவரிசையை காட்டலாம். அப்போது பிரபாகரனின் உதவியை மத்திய அரசு நாடவேண்டி வரலாம்.

10) ஐரோப்பிய ஒருங்கிணைவு நாடுகளில் லட்சக்கணக்கான இறைச்சி வகைகள் தேவைக்கு மிஞ்சித் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. இது அளவுக்கு மீறிய உற்பத்திப் பெருக்கம் என்கிறார்கள் இவ்ஐரோப்பியக் கொழுத்தவர்கள். இவற்றை எறிகிறார்கள். கடல்களில் கொட்டுகிறார்கள். இவற்றை ஏன் மூன்றாவது உலகநாடுகளுக்கு இலவசமாய் கொடுக்கக் கூடாது? பல ஐரோப்பிய நாடுகள் மூன்றாம் உலகநாடுகளின் வளங்களிலும், உணவுகளிலும் கொழுத்தவாகள்தானே. சயிரே, சோமாலியா, சிறீலங்கா போன்ற நாடுகளில் பட்டினியாவுகள் நடப்பது தெரியவில்லையா?

11) கொழும்புத் தேர்தலில் படுதோல்வியுற்ற தமிழ்க்குழுக்கள் அரசியலில் இருந்து இனியாவது முற்றாக ஒதுங்கிக்கொள்வார்களா? என தமிழர்கள் வினவுகிறார்கள்

12) "கலேவலா" என்பது பின்லாந்து நாட்டின் தேசிய காவியம் என்பதோடு உலகளாவிய மிகச் சிறந்த இலக்கியங்களில் ஒன்றுமாகும்.

மூன்று வருட கால ஆய்வுக்குப் பின் தமிழில் 480 பக்கங்களில் வெளிவந்திருக்கும் இந்த நூல் ஐம்பது பாடல்களில் 22,795 அடிகளைக் கொண்டது. முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட வகையில் தமிழ் முப்பதாவது மொழி என்ற சிறப்பைப் பெறுகின்றது. இவை தவிர, சுருக்கமான மொழியாக்கங்கள் மேலும் பதினைந்து மொழிகளில் வெளிவந்திருக்கின்றன. மொத்தத்தில் இதன் 45 மொழிபொயர்ப்புகள் நூறுக்கும் மேற்பட்ட பதிப்புகளாக வெளிவந்திருக்கின்றன.

"கலேவலா"வின் தமிழாக்கம் பற்றிய சில விபரங்களை இப்பொழுது இன்டர்நெட்டில்

**http://www.helsinki.fi/~ramaling/kalevala-tamil/**

அன்பானதமிழர்களே!நல்லெண்ணத்துடன் சந்தா தந்துதவியுள்ளீர்கள்! இதயபூர்வநன்றிகள்!

Eiker Grafisk A/S, Mjøndalen, Norway
2000 eks., 1997 april

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்